# திருக்கடைக்காப்பில் திருமயிலை கண்ட விழாக்கள்

**க.கு.பிரபாகரன் & முனைவர் இரா. மஞ்சுளா**

**தமிழ்த்துறை**

**அ.வ.அ. கல்லூரி (தன்னாட்சி),**

**மன்னம்பந்தல், மயிலாடுதுறை.**

**20**

**ஆய்வுச்சுருக்கம்**

சமூகத்தின் கூறுகளான குடும்பம். சமயம், மொழி, பண்பாடு என்பனவற்றுள் பண்பாட்டை வளர்ப்பதில் விழாக்கள் முக்கிய அங்கம் வகிக்கின்றன. பழந்தமிழர்கள் ஒன்று கூடி ஆடியும், பாடியும், இறைவனை வழிபட்டும், உணவளித்தும் விழாக்கள் கொண்டாடியதை பழந்தமிழ் இலக்கியங்கள் சுட்டுகின்றன அவ்வகையில் கி.பி. ஏழாம் நூற்றாண்டில் வாழ்ந்த திருஞானசம்பந்தர் திருமயிலாப்பூர் திருத்தலப் பதிகத்தில் பன்னிரண்டு மாதங்களிலும் நடைபெற்ற விழாக்களின் மூலம் பண்பாட்டினை அறியும் நோக்கில் இவ்வாய்வு அமைகிறது.

**முன்னுரை**

திருஞானசம்பந்தர் அருளிய தேவாரம் திருக்கடைக்காப்பு என வழங்குவது மரபாகும். திருஞானசம்பந்தர் இறைவன் வீற்றிருக்கும் திருத்தலங்களில் இயற்கை அழகினையும், இறைவனின் சிறப்புகளையும் மக்களின் வாழ்வியல் நெறிகளையும், பண்பாட்டையும் போற்றியுள்ளார். அவர் பாடிய திருப்பதிகங்களில் அற்புத திருப்பதிகமாக விளங்கிய திருமயிலை திருப்பதிகத்தில் விழாக்கள் நடைபெற்றதை புலப்படுத்தியுள்ளார்.

**கலைச்சொற்கள்**

உருத்திர பல்கணத்தார் – அடியவர். ஆர்திரைநாள் – திருவாதிரை. நெய்ப்பூசம் ஒண்புழுக்கல் – நெய்யால் மறைக்கப்பட்ட ஒள்ளிய சோறு. நடமாடல் – கூத்தாடுதல் பொற்றாப்பு – பொன்னூசல் பெருஞ்சாந்தி – பவித்திரோற்சவம்.

**திருப்பதிகச் சிறப்பு**

- திருமயிலாப்பூர் திருப்பதிகம் இரண்டாம் திருமுறையில் “சீகாமரம்” என்ற பண்ணில் அமைந்துள்ளது.
- எலும்பை பெண்ணாக்கிய பதிகம். (அரவு தீண்டி இறந்த மயிலாப்பூர் சிவநேசரின் மகளான பூம்பாவையை உயிருடன் வரவழைத்த பதிகமாகும்.)

**“மண்ணி னிற்பிறந் தார்பெறும் பயன்மதி சூடும்**
**அண்ண லார்அடி யார்தமை அமுதுசெய் வித்தல்**
**கண்ணி னால்அவர் நல்விழாப் பொலிவுகண் டார்தல்**
**உண்மை யாமெனில் உலகர்முன் வருகென உரைப்பார்”** [1]

**திருவிழாக்கள்**

மயிலாப்பூரில் திங்கள் தோறும் திருவிழாக்கள் நடைபெற்றதை தம்பதிகத்தில் பதிவு

செய்துள்ளார். பூரட்டாதி விழா, ஐப்பசிஓணம், கார்த்திகை விளக்கீடு, மார்கழி ஆதிரை, தைப்பூசம், மாசிமகம், பங்குனி உத்திரம், சித்திரை விழா, ஊஞ்சலாடு விழா, பெருஞ்சாந்திவிழா கொண்டாடியதை புலப்படுத்தியுள்ளார்.

**பூரட்டாதி விழா**

புரட்டாசி மாத்த்தில் நடைபெற்ற விழாவாகும். அடியவர்களுக்கு அமுதுபடைத்து விழா நடைபெற்றதை திருஞானசம்பந்தர்.

**"ஒட்டிட்ட பண்பி னுருத்திர பல்கணத்தார்க்**
**கட்டிட்டல் காணாதே போதியோ பூம்பாவாய்"** [2]

**ஐப்பசிஒண விழா**

அருந்தவ முனிவர்களுக்கு எல்லாம் அமுது படைக்கும் விழாவாகும். திருவோணத்தில் கொடியேற்றி கார்த்திகையில் தீர்த்தவாரி செய்யும் விழாவாகும். திருமாலுக்குரிய நாளாக கருதப்படுகிறது. இன்றைய தினம் கேரளாவில் ஒணவிழா சிறப்பாக நடைபெறுவது குறிப்பிடத்தக்கதாகும்.

**"ஐப்பசி யோண விழாவும் மருந்தவர்கள்**
**துய்பனவும் காணாதே போதியோ பூம்பாவாய்"** [3]

**கார்த்திகை தீபவிழா**

சங்க காலம் முதல் தற்காலம் வரையில் கொண்டாடப்பட்டு வரும் தொன்மை விழாவாகும். கார்த்திகை மாதத்தில் வரும் கார்த்திகை நாளன்று இல்லங்களிலும், ஆலயங்களிலும் தீபம் ஏற்றி வழிபடும் விழாவாகும். திருஞானசம்பந்தரும் இளமகளீர் எல்லாம் விளக்கேற்றி வழிபட்டக் காட்சியினை,

தொன்மை மிக்க இவ்விழாவினை குறித்து சங்க இலக்கியங்களும் குறித்துள்ளன. கார்த்திகை வழிபாடு பற்றி அகநானூறு

**"உலகுதொழில் உலந்து நாஞ்சில் துஞ்சி**
**மழைகால் நீங்கிய மாக விசும்பில்**
**குறுமுயல் மறுநிறம் கிளர மதிநிறைந்து**
**அறுமீன் சேரும் அகலிருள் நடுநாள்**
**மறுகு விளக்குறுத்து மாலை தூக்கிப்**
**பழவிறல் மூதூர்ப் பலருடன் துவன்றிய**
**விழவுடன் அயர வருகதில் அம்ம!"**[5]

பிரிந்த தலைவன் தலைவியோடு கார்த்திகைவிழா கொண்டாட வரவேண்டும் என்று குறிப்பிடுவதன் மூலம் தொல்விழாவாக கொண்டாடப்படுவதை உணரமுடிகிறது.

**திருவாதிரை விழா**

மார்கழி மாத்த்தில் திருவாதிரை நாளில் இறைவனுக்கு விழா கொண்டாடப்பட்டதை பழந்தமிழ்

இலக்கியங்கள் சுட்டியுள்ளன. திருஞானசம்பந்தரும் மயிலாப்பூரில் திருவாதிரை விழா நடைபெற்றதை சுட்டியுள்ளார்.

**ஆர்திரைநாள் காணாதே போதியே பூம்பாவாய்** [6]

சங்க இலக்கியமான பரிபாடலில் திருவாதிரை விழா நடைபெற்றதை இங்கு நோக்குவது நலமாகும்.

**"கனைக்கும் அதிர்குரல் கார்வானம் நீங்கப்**
**பனிப்படு பைதல் விதலைப் பருவத்து**
**ஞாயிறு காயா நளிமாரிப் பிற்குளத்து**
**மாயிரும் திங்கள் மறுநிரை ஆதிரை**
**விரிநூல் அந்தணர் விழவு தொடங்கப் ……"** [7]

**தைப்பூச விழா**

தமிழர்களால் வெகு விமர்சையாக கொண்டாடப்படும் விழாக்களுள் தைப்பூசவிழாவும் ஒன்றாகும். திருஞானசம்பந்தர் தம்முடைய திருப்பதிகத்தில் அடியார், வறியோர் முதலியோர்க்கு மகளீர் நெய்யொழுகிய சிறந்த பொங்கல் படைத்து தைப்பூச விழா கொண்டாடியதை காணமுடிகிறது.

**"நெய்ப்பூசு மொண்புழுக்க னேரிழையார் கொண்டாடும்**
**தைப்பூசங் காணாதே போதியோ பூம்பாவாய்"**[8]

**மாசிமகம் (கடல் நீராட்டு)**

'தீதுநீங்க கடலாடியும் மாசு போகப் புனல்படிந்து' வந்த மரபு சங்க காலந்தொட்டே நிலவியதை இலக்கியங்கள் சுட்டுகிறது. தைநீராடல் அம்பாஆடல் போன்ற விழாக்களை சங்க இலக்கியங்கள் வழி அறியலாம்.

திருஞானசம்பந்தரும் மாசி மாத மகநாளில் இறைவனுக்கு கடல்நீராட்டு நடைபெற்றதை குறித்துள்ளார்.

**"மடலார்ந்த தெங்கின் மயிலையார் மாசிக்**
**கடலாட்டுக் கண்டான் கபாலீச் சரம்மர்ந்தான்"**[9]

**பங்குனி உத்திர விழா**

பங்குனி மாதத்தில் முழுமதி நாளில் வரும் உத்திரம் திருநாள் விழாவினை சங்க இலக்கியங்கள் சுட்டியுள்ளன. திருஞானசம்பந்தரும் உத்திரநாள் அன்று இறைவனுக்கும் அடியவர்க்கும் அமுதுபடைத்தக் காட்சியினை.

**"பலிவிழாப் பாடல்செய் பங்குனி யுத்தரநாள்**
**ஒலிவிழாக் காணாதே போதியோ பூம்பாவாய்"**[10]

சங்க இலக்கியமான அகநானூற்றில் பங்குனி விழா நடைபெற்றதை,

**"வென்றெறி முரசின் விறல்போர்ச் சோழர்**
**இன்கடுங் கள்ளின் உறந்தை ஆங்கண்**
**வருபுனல் நெரிதரும் இருகரைப் பேரியாற்று**

**உருவவெண் மணல்முருகு நாறு தண்பொழில்**

**பங்குனி முயக்கம் கழிந்த வழிநாள்”** [11]

**சித்திரை அட்டமிநாள் விழா**

இன்றைய நாளில் சித்திரை விழாவாகக் கொண்டாடப்படுகிறது. சித்திரை மாத அட்டமி நாளில் இறைவனுக்கு விழாக் கொண்டாடியதை சம்பந்தர்.

**“பண்ணார் பதினெண் கணங்கடம் மட்டமிநாள்”**[12] என்று குறித்துள்ளார்.

**பொற்றாப்பு விழா (ஊஞ்சலாட்டுவிழா)**

வைகாசி மாதத்தில் இறைவனை ஊஞ்சலில் வைத்து விழாக்கொண்டாடியதை திருஞானசம்பந்தர்.

**“கற்றார்க ளேத்துங் கபாலீச் சரமமர்ந்தான்**

**பொற்றாப்புக் காணாதே போதியோ பூம்பாவாய்”** [13]

**பெருஞ்சாந்தி விழா**

இது ஆனி, ஆடி, ஆவணி ஆகிய மாதங்களில் நடைபெற்ற விழாவாகும். இவ்விழாவானது மாதங்களில் நடைபெற்ற விழாவாகும். இவ்விழாவானது பவித்திரோற்சவம் என அழைக்கப்படுகிறது. திருஞானசம்பந்தர் மயிலாப்பூரில் நடைபெற்ற பெருஞ்சாந்தி விழாவினை சுட்டியுள்ளார்.

**கருஞ்சோலை சூழ்ந்த கபாலீச் சரத்தான்றன்**

**பெருஞ்சாந்தி காணாதே போதியோ பூம்பாவாய்** [14]

**ஆய்வு முடிவுகள்**

திருஞானசம்பந்தர் தம்முடைய திருமயிலாப்பூர் திருப்பதிகத்தில் பூரட்டாதி விழாவில் தொடங்கி பெருஞ்சாந்தி விழாவில் நிறைசெய்துள்ளதை அறியமுடிகிறது.

விழாக்காலங்களில் மக்கள் ஒன்று கூடி ஆடி பாடியதை காணமுடிகிறது.

விழாக்களில் அனைவருக்கும் உணவளித்த செய்தியினையும் அறிய முடிகிறது.

விழாக்கள் மலிந்திருந்ததையும் அதன் காரணமாக எழுந்த ஆரவார ஒலியையும் கேட்க முடிகிறது.

**முடிவுரை**

திருஞானசம்பந்தர் தம்முடைய திருமுறைகளில் திருத்தலங்களில் நடைபெற்ற திருவிழாக்களை குறித்திருப்பினும், திருமயிலாப்பூர் திருப்பதிகத்தில் ஒவ்வொரு மாதமும் நடைபெற்ற விழாக்கள் மூலம் தமிழர்களின் பண்பாட்டை போற்றியுள்ளார்.

அடிக்குறிப்புகள்:

1. பெரியபுராணம் தொகுதி 2 பா.எ. 2990 ப.1232
2. இரண்டாம் திருமுறை பதிகம் 47 பா.எ. 1;ப.596
3. மேலது பதிகம் 47 பா.எ.2; ப.597
4. மேலது பதிகம் 47 பா.எ.3; ப-597

5. அகநானூறு பா.எ.141 (அடி 5-11) ப-47
6. இரண்டாம் திருமுறை பதிகம் 47 பா.எ.4; ப-598
7. பரிபாடல் பா.எண். 11 (அடி 74-92) ப-173
8. இரண்டாம் திருமுறை பதிகம் 47; பா.எ.5; ப-599
9. மேலது பதிகம் 47; பா.எ.6; ப-599
10. மேலது பதிகம் 47; பா.எ.7
11. அகநானூறு – பா.எ.137 (அடி 5-11) ப.38
12. இரண்டாம் திருமுறை பதிகம் 47; பா.எ.8
13. மேலது பதிகம் 47; பா.எ.9 ப-601
14. மேலது பதிகம் 47; பா.எ.10 ப-601

(**பா.எ.** - பாடல் எண், **ப** – பக்கம்)

**பார்வை நூல்கள்**


1. திருஞானசம்பந்தர் தேவாரம், இரண்டாம் திருமுறை ஞானசம்பந்தம் பதிப்பகம், மயிலாடுதுறை. மு.ப. 1954.
2. பெரிய புராணம், வர்த்தமானன் பதிப்பகம், சென்னை. இ.மெயில்: varthashree@gmail.com 2019.
3. அகநானூறு முனைவர் தமிழண்ணல் முனைவர் சுப. அண்ணாமலை கோவிலூர், மடாலயம் வெளியீடு கலாசேஷத்ரா அச்சகம், சென்னை 2003
4. பரிபாடல் – முனைவர் தமிழண்ணல் முனைவர் சுப. அண்ணாமலை கோவிலூர், மடாலயம் வெளியீடு கலாசேஷத்ரா அச்சகம், சென்னை 2003
5. சங்க இலக்கியங்களில் சமய நோக்கு. தருமை ஆதினம். அனைத்துலக சைவசித்தாந்த ஆராய்ச்சி நிறுவனம், மயிலாடுதுறை 1991
6. சமய ஒழுக்கம். தருமை ஆதீனம். அனைத்துலக சைவசித்தாந்த ஆராய்ச்சி நிறுவனம், மயிலாடுதுறை 1993